# உண்மையான அன்பு

Pr.K.Joseph

**1கொரி–13:** *1 நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.*

தேவன் அன்பாயிருக்கிறார் என்றும், அவர் எதைச் செய்தாலும் அன்பினிமித்தமே செய்கிறார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். நம்மிடத்திலே தேவன் அன்பை எதிர்பார்க்கிறார், நாம் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும், எதைச்செய்தாலும் அன்பினிமித்தமே செய்யவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். *அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.* (1கொரி–13: 2).

- நீங்கள் அன்பை எவ்வாறு அடையாளப்படுத்துவீர்கள்?
- நீங்கள் ஒருநபர் மீது அன்பாக இருப்பதை எப்படி விவரிப்பீர்கள்?
- நீங்கள் ஒருநபர் மீது அன்பாக இருப்பதை எப்படி வெளிப்படுத்துவீர்கள்?
- தேவன் தமது அன்பை எப்படி வெளிப்படுத்துகிறார்?

| | |
|---|---|
| ஆறுதல்படுத்துதல் | திருத்துதல் |
| கற்றுக்கொடுத்தல் | பயிற்றுவித்தல் |
| உருவாக்குதல் | உடைத்து உருக்குதல் |
| அரவணைத்தல் | அடித்தல் |
| தூக்கியெடுத்தல் | விழவிடுதல் |
| சீடராக்குதல் | ஒழுங்குபடுத்துல் |
| கண்டுகொள்ளாதிருத்தல் | கண்டித்தல் |

முதல் பகுதி நம் அனைவருக்கும் பிடித்ததாக இருக்கிறது.
இரண்டாம் பகுதியோ ஏற்பதற்குக் கஷ்டமானதாகத் தெரிகிறது. ஆனால் அது அவசியமானதாக இருக்கிறது.

எபி–12: 5 *அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே.*
எபி–12: 6 *கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.*
எபி–12: 9 *அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?*
எபி–12: 10 *அவர்கள் தங்களுக்கு நலமென்றுதோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள், இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.*

உண்மையான அன்பில் உள்ள ஆசீர்வாதங்களை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளவும், பிறருக்கு அதை முழுமையாகக் கொடுத்திடவும் தேவன் உதவிசெய்வாராக.
உண்மையான அன்பு சுயநலமற்றது, ஆதாய நோக்கமற்றது, நிதானமானது, நன்மையானது, நல்லது.

## உண்மையான அன்பில் உயர்தர அன்பு:

நம் அனைவருக்கும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொடுத்தது, நம்மை நீதிமான்களாக மாற்றியது, பரலோக ராஜ்யத்தின் பிரஜைகளாக்கியது, உண்மையான பரலோகத் தகப்பனுடன் நித்திய உறவுக்குள்ளாக இணைத்தது, தவறை உணர்ந்து மனந்திரும்பி தன்னிடம் வரும் ஒருவரையும் புறம்பே தள்ளாதது தெய்வீக அன்புதான்.

- ❖ தம்முடைய சொந்தக் குமாரன் என்றும் பாராமல் பரலோக தேவன் இயேசுவையே நமக்காகத் தந்த தெய்வீக அன்பு
- ❖ நம்மை மீட்பதற்காக இயேசு தம்முடைய சொந்த ஜீவனையே பலியாகத் தந்த தெய்வீக அன்பு
- ❖ சிலுவையிலே அடிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு நமது பாவங்களைச் சுமந்து தீர்த்த தெய்வீக அன்பு
- ❖ மறுபடியும் வந்து நம்மைத் தம்மோடு மணவாட்டியாகச் சேர்த்துகொள்ளும் தெய்வீக அன்பு
- ❖ உலகம் நம்மை வெறுத்தாலும் ஒருபோதும் வெறுக்காத, மறக்காத தெய்வீக அன்பு

இந்த அன்பு கிரேக்கத்தில் *“அகாபே” AGAPE* என்று அழைக்கப்படுகிறது. அதனுடைய சரியான அர்த்தம் என்னவென்றால் தன்னலமற்ற, தியாம் நிறைந்த அன்பு.